பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திந் தற்று (குறள் எண்:1000)

பொருள்: நல்ல பண்பு இல்லாதவன் அடைந்த பெரும் செல்வம், பாத்திரம் கெட்டால் அதிலுள்ள நல்ல பால் கெட்டுப் போவது போலும்.

பழநி நகராட்சி

2022–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13.07.2022–ஆம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பழநி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் பழனியாண்டவர் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணைத் தலைவர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகராட்சி அலுவலகம்,பழநி
நாள். 07.07.2022

நகர்மன்ற தலைவர்
பழநி நகராட்சி

பொருள்கள்

31.05.2022 ம் நாளன்று ஒத்திவைக்கப்பட்ட சாதாரணகூட்ட பொருள் எண்கள் **46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 59, 60, 61, 62, 63, 64**

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

46. பழநி நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்க்காணும் குத்தகை இனத்திற்கு குத்தகை உரிமம் 23.07.2022 ஆம் நாளன்று மூன்றாண்டுகள் முடிவடைவதால் அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) நாள்.19.09.2008–ன் படி கீழ்க்காணும் குத்தகை உரிம இனத்திற்கு மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு (ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 வரை) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ. எண்	குத்தகை உரிம இனத்தின் பெயர்	முன்வைப்புத் தொகை (ரூ.இலட்சத்தில்)	சால்வன்சி 01.04.2022 க்கு பிறகு பெறப்பட வேண்டும்	சால்வன்சி இல்லாத பட்சத்தில் கூடுதல் ஏலக் கேள்விக்கான தொகை (ரூ.இலட்சத்தில்)
1	புதிய விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் தென் கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம். அ)ஒருமுறை கழிப்பறையை பயன்படுத்துதல் கட்டணம் – சிறுநீர் கழிக்க ரூ.3/– மலம் கழிக்க ரூ.5/– ஆ)ஒருமுறை குளியலறையை பயன்படுத்துதல் கட்டணம் – ரூ.15/–	10.00	50.00	10.00

மேற்கண்ட குத்தகை இனத்திற்கான ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கைகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யும் வகையில் ஏற்படும் செலவினம் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் அடங்கிய புத்தகம் அச்சடிப்பதற்கு ஏற்படும் செலவினம் மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.50,000/– செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலுகக்குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.5033/2021/அ1)

<u>ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>

47. பழநி நகராட்சி சித்தா மருந்தகத்திற்கு 2022–2023ஆம் நிதி ஆண்டிற்கு கீழ்காணும் விவரப்படி தேவையான சித்தா மருந்துகள் TAMPCOL என்ற அரசு நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்துகொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்	விலைப் பட்டியல் வரிசை எண்	மருந்து	தேவையான அளவு
		<u>சூர்ணம்</u>	
1.	8	நிலவாகை சூரணம்	500 gm x 5
2.	13	திரிபலா சூரணம்	500 gm x 10
		<u>மாத்திரைகள்</u>	
3.	16	அமுக்கரா சூர்ண மாத்திரை	500 Nos x12
4.	18	ஏலாதி சூர்ண மாத்திரை	500 Nos x12
5.	27	பறங்கிப்பட்டை சூர்ண மாத்திரை	500 Nos x6
6.	31	தாளிசாது சூர்ணம் மாத்திரை	500 Nos x12
7.	33	திரிபலா சூர்ணம் மாத்திரை	500 Nos x6
8.	19	Ferrosid மாத்திரை	500 Nos x2
		<u>புறமருந்துகள்</u>	
9.	36	அமிர்த வெண்ணெய்	500 gm x3
		<u>குடிநீர்</u>	
10.	44	கபசுர குடிநீர்	500 gm x100
		<u>லேகியம்</u>	
11.	51	தேற்றான் கொட்டை இலேகியம்	500 gm x20
12.	54	நெல்லிக்காய் இலேகியம்	500 gm x20
13.	5(ஆயுர்வேதா)	அசுவகந்தா இலேகியம்	500 gm x20
		<u>தைலம்</u>	
14.	25(ஆயுர்வேதா)	பிண்டத் தைலம்	500 ml x 50
15.	58	கற்பூராதித் தைலம்	500 ml x50
16.	56	அருகன் தைலம்	500 ml x 10
17.	64	புங்கத் தைலம்	500 ml x10
18.	62	மத்தன் தைலம்	500 ml x5
19.	61	கையான் தைலம்	500 ml x20
		<u>தீநீர்</u>	
20.	73	ஓமத்திநீர்	500 ml x20
21.	74	Pain balm	100gm x10

அலுவலக குறிப்பு:–

பொதுசுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.644/2017/எச்.2

<u>ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>

48. பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மலேரியா பிரிவின் மூலம் வார்டு 1 முதல் 33 வரை நாள் ஒன்றுக்கு ஒரு வார்டு வீதம் புகைமருந்து தெளிப்பான் மூலம் முதிர்ந்த கொசுக்களை அழிக்க தேவையான பழுதடைந்துள்ள தெளிப்பான் கருவிகளை பழுது பார்க்க தேவையான உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

பொது சுகாதாரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2049/2022/எச்.2

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

49. பழநி நகராட்சி பொது சுகாதாரப் பணிகளில் விழிப்புணர்வு (Health Activities) டெங்கு, மலேரியா, TuberCulosis, Cancer, Leprosy,Aids, Polio Pneumonia, Diabetes, தாய்பால் ஊட்டம் போன்ற பொது சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பொதுமக்களுக்கு ஏற்படுத்த விழிப்புணர்வு பதாகைகள், பிளக்ஸ், அறிவிப்பு நோட்டீஸ் அச்சிட்டு வழங்கவும், ஆட்டோ மூலம் விளம்பரப்படுத்தி நிகழ்ச்சிகள் நடத்திடவும், வரும் பொதுமக்களுக்கு டீ,காபி , மீட்டிங் ஹால் புக் செய்வதற்கும், கோவிட்–19 தடுப்பூசி முகாம் பற்றி விளம்பரம் செய்திடவும், வரும் பணியாளர்களுக்கு உணவு பொருட்கள் வழங்கிடவும், நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு பற்றிய பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசு பொருட்கள் வழங்கவும், பள்ளியில் ஆண்டுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதை ஊக்குவிக்க சான்றிதழ்வழங்கி பரிசு பொருட்கள் வழங்கவும், வறுமை கோட்டில் பயிலும் மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்கள், பேனா, பள்ளிக்கு எடுத்துச் செல்லும் பைக்கட்டு வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தேவையான ப்ரொஜக்டர், ஸ்கிரீன், மைக், ஸ்பீக்கர் முதலானவைகள் பெறுவதற்கு தேவையான உத்தேச செலவினம் ஆண்டிற்கு சுமார் ரூ.6,00,000/– (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

பொது சுகாதாரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2048/2022/எச்.2

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

50. பழநி நகராட்சி–பொது சுகாதாரம்–தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து தடுப்பூசி செலுத்தி தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள இந்திய விலங்குகள் நல வாரியம், உயர் துறை அலுவலர்கள், பொதுமக்கள், பத்திரிக்கை, ஊடக அமைப்புகள் மற்றும் பிற அமைப்புகளிடமிருந்து கோரிக்கைகளும், அறிவுறுத்தல்களும் வரப்பெற்றதில் 2020–2021 ஆண்டு மேற்படி பணிகள் மேற்கொள்ள நகரில் சுற்றித்திரியும் சுமார் 1500க்கும் மேற்பட்ட தெரு நாய்களுக்கு பிராணிகள் இனப்பெருக்கத் தடை விதிகள் 200 1(DOG Rules) –ன்படி மதுரையை சேர்ந்த பிராணி மித்ரன் என்னும் இந்திய பிராணிகள் நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட NGO's மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்காணும் நிறுவனத்தார் தேவையான அடிப்படை வசதிகள் செய்துதர கோரியதின் பொருட்டு மேற்படி பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தெரு நாய்கள் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பு மருந்து போடும் பணிகள் மேற்கொள்ள இந்திய பிராணிகள் நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடைக்கானலில் உள்ள KSPCA NGO's–ஐ கேட்டுக்கொண்டதில் கீழ்காணும் விவரப்படி தேவையான வசதிகள் ஏற்படுத்தி தர கேரியுள்ளார்கள். அதன்படி அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்	பொருட்கள்	எண்ணிக்கை
1.	AC–1.5 Ton	2
2.	FRIDGE	1
3.	FORMALIN SOLUTION	10L
4.	WASH BASIN	2
5.	IV STAND	2
6.	SURGICAL TABLE	1
7.	AUTOCLAVE	20 L
8.	WASHING MACHINE	1
9.		

அலுவலக குறிப்பு:-

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1776/2021/எச்.2

<u>ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>

51. பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன்படி பழநி நகராட்சியினை திறந்தவெளி மலம் கழித்தலற்ற நகராட்சியாக சான்று பெறுவதற்கு ODF+ மற்றும் குப்பையில்லா நகராட்சியாக சான்று பெறுவதற்கும்(Garbage Free City) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக பழநி நகராட்சியினை மலம் கழித்தலற்ற நகரமாக அறிவிக்கும் பொருட்டு மற்றும் குப்பையில்லா நகராமாக தர சான்றிதழ் பெறும் பொருட்டு விளம்பரம் செய்வதற்கு நகர் மன்ற தீர்மான எண்.8 நாள்.11.04.2022 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட விவரப்படி ஆட்டோ, பிளக்ஸ் மற்றும் துண்டு பிரசுரம் விளம்பரம் மேற்கொள்ள மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. ஆட்டோ விளம்பரம்

வ. எண்	விபரம்	P.ராமசாமி, ஸ்ரீ மீனாட்சி சவுண்ட் சர்வீஸ், ராஜாஜி சாலை, பழநி	நியூ வேவ்ஸ் ஒலி. ஒளி நிலையம், புதுமார்க்கெட், சுப்பிரமணியபுரம் பழநி	KM.சதூர்தீன், ஸ்டார் எலக்ட்ரானிக்&சவுண்ட் சர்வீஸ், பாய்கடை தெரு, பழநி
		1	2	3
1	ஆட்டோ விளம்பரம் செய்ய நாள் 1க்கு வாடகை	ரூ.2250/-	ரூ.2300/-	ரூ.2100/-

2. பிளக்ஸ் விளம்பரம்

வ. எண்	விபரம்	எண்ணிக்கை	முகில் டிஜிட்டல், தாராபுரம் ரோடு, பழநி ரூ. (Including GST)	அன்னை பிரிண்டர்ஸ் & பைன்டர்ஸ், ராஜேந்திரா ரோடு,பழநி ரூ. (Including GST)	விக்னேஷ் பிரிண்டர்ஸ், புது தாராபுரம் ரோடு, பழநி ரூ. (Including GST)
			1	2	3
1.	FLEX STAR- 6x6	36	37,296/-	39,900/-	38,000/-

3.துண்டுப்பிரசுரம்

வ. எண்	விபரம்	எண்ணிக்கை	முகில் டிஜிட்டல், தாராபுரம் ரோடு, பழநி ரூ. (Including GST)	அன்னை பிரிண்டர்ஸ் & பைன்டர்ஸ், ராஜேந்திரா ரோடு,பழநி ரூ. (Including GST)	விக்னேஷ் பிரிண்டர்ஸ், புது தாராபுரம் ரோடு, பழநி ரூ. (Including GST)
			1	2	3
1.	PAMPHLETS A4 Size Single Side Multicolour	10000	18,000/-	19,000/-	19,000/-

1. மேற்கண்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு ஆட்டோ விளம்பரத்திற்கு வரிசை எண்.3ல் கண்டுள்ள KM.சதூர்தீன், ஸ்டார் எலக்ட்ரானிக்&சவுண்ட் சர்வீஸ், பாய்கடை தெரு, பழநி என்ற நிறுவனமும்,
2. பிளக்ஸ் விளம்பரத்திற்கு வரிசை எண்.1ல் கண்டுள்ள முகில் டிஜிட்டல், தாராபுரம் ரோடு, பழநி என்ற நிறுவனமும்
3. துண்டு பிரசுரம் அச்சடித்து வழங்க வரிசை எண்.1ல் கண்டுள்ள முகில் டிஜிட்டல், தாராபுரம் ரோடு, பழநி என்ற நிறுவனமும் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளது. எனவே, குறைவாக
4. விலைப்புள்ளி வழங்கியுள்ள மேற்கண்டுள்ள நிறுவனங்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பொது சுகாதார அசவர அவசியம் கருதி மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

52. பழநி நகராட்சி பகுதிகளில் சுமார் 5250 வீடுகள் மற்றும் அரசு கட்டிடங்களில் AIR PIPE உடன் கூடிய நச்சு தொட்டிகள் (Septic tank) உள்ளது, கொசுக்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த மேற்படி நச்சு தொட்டி AIR PIPE களில் கொசு புகுந்து Septic tank –ல் இனப்பெருக்கம் ஏற்படுத்துவதை தடுக்க கொசு புகா வண்ணம் கொசு வலை கட்டி நடவடிக்கை மேற்கொள்ள 1'x1' என்ற Size உள்ள 5250 எண்ணிக்கைகள் கொசு வலைகள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ,1,50,000/- (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு;-

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2049/2022/எச்.2

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

53. பழநி நகரம், அருள்மிகு முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றாகும் இந்நகரம் வரலாற்று சிறப்பும் புராணச் சிறப்பு மிக்க நகரமாகும். பழநி நகராட்சி 01.08.1886 ல் மூன்றாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு, தற்போது 01.02.1988 ஆம் தேதிய அரசாணை எண். 1075, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின்படி 14.12.1988 முதல் தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 6.63 சதுர கிலோ மீட்டர ஆகும். இந்நகராட்சியில், நகரின் எல்லையில் இருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் SS Tank தலைமை நீரேற்று நிலையமும், பாலாறு 8 கி.மீ தூரத்திலும், நகரின் மையத்தில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் நகராட்சி உரக்கிடங்கும் அமைந்துள்ளது. இந்நகராட்சி பகுதியில் 0.30 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலை சாலையும், 97.44 கிலோ மீட்டர் நகராட்சி சாலையும் உள்ளது.

பழநி நகராட்சியில் அலுவலக பணியின் நிமித்தம் தற்போது இந்நகராட்சியில் இரண்டு எண்ணம் புதிய ஈப்பு வாகனங்கள் இயக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 1473/2022/பி1 நாள். 01.04.2022-ன் படி தேர்வு நிலை நகராட்சிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஈப்பு வாகனங்களின் எண்ணிக்கை 4 ஆகும். தற்போது நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022 முடிவுற்றுள்ள நிலையில் நகர்மன்றத் தலைவருக்கு வாகனம் வழங்கப்படாமல் உள்ளது. மேலும், நகர் பகுதியில் நடைபெறும் திட்டப் பணிகளை ஆய்வு செய்வதற்கு நகராட்சி பொறியாளருக்கு வாகனம் ஏதும் இல்லாத நிலையில் உள்ளது. தற்போது இயங்கி வரும் மூன்று வாகனங்களில் TN 57 U 7520 15 வருடங்களுக்கு மேலாகி இயங்கி வருகிறது. மேலும் இரண்டு வாகனங்கள் மட்டும் நல்ல நிலையில் (TN 94 4677, TN 57 AT 3258)

உள்ளது.எனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றறிக்கையின்படி இந்நகராட்சிக்கு இரண்டு ஈப்பு வாகனம் பற்றாக்குறையாக உள்ளது. பற்றாக்குறையாக உள்ள இரண்டு ஈப்பு வாகனங்களை குடிநீர் நிதியின் மூலம் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 27.00 இலட்சம் ஆகும்.

1) நகர்மன்றத் தலைவர் வாகனம் (Mahndra Scorpio S3 Plus) – குடிநீர் நிதி

2) நகராட்சி பொறியாளர் வாகனம் (Mahndra Bolero B6) – குடிநீர் நிதி

அலுவலக குறிப்பு:–

1) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணை அனுப்பவும், அனுமதி பெற்று வாகனம் கொள்முதல் செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதை அனுமதிக்கலாம்.

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

54. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2020/IT, நாள்.31.03.2022–ல் பழநி நகராட்சி அலுவலகத்தில் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள கணினிகளில் மென்பொருள் உபயோகத்திற்கு (UTIS) உள்ளாட்சி அமைப்புகளின் தகவல் தொகுப்பு 01.07.2021 முதல் 31.12.2021 வரை செயல்படுத்தியதற்கான கட்டணத் தொகை ரூ.96,590/–ஐ (ரூபாய் தொன்னூற்று ஆறாயிரத்து ஐந்நூற்று தொன்னூறு மட்டும்) M/s.BSNL நிறுவனம் ராயப்பேட்டை ஹை ரோடு, சென்னை–6 நிறுவனத்திற்கு வழங்கவும் தொகையினை பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்..
2. மேற்காணும் செலவினத்தை பொது நிதி 2022–23–யில் மேற்கொள்ளலாம்.

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

59. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2043/2008/பி1, நாள்.19.04.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு தேவையான (1500–2000) வாட்ஸ் திறன் கொண்ட 2 எண்ணம் பேட்டரியுடன் கூடிய Power Inverter இன்வெர்ட்டர் கொள்முதல் செய்து வழங்க உத்தேச செலவினத் தொகை ரூ.0.60/– இலட்சத்தில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஆகும் செலவினத்தொகையினை பொதுநிதி 2022–23–ல் மேற்கொள்ளலாம்.

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

60. பழநி நகராட்சி பொறியியற் பிரிவு வாகனங்களுக்க 2022–23–ம் ஆண்டிற்கு காப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டி உள்ளது. எனவே கீழ்க்கண்ட நான்கு வாகனங்களுக்குரிய மொத்த தொகை ரூ.60,213/–ஐ (ரூபாய் அறுபதாயிரத்து இருநூற்று பதின்மூன்று மட்டும்) The New India Assurance Co.Ltdபழநி என்ற நிறுவனத்திற்கு காப்பீட்டை செலுத்தி புதுப்பிக்கவும் தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்தவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	வாகன எண்	தொகை ரூ
1	TN 57AX 5944	13,571
2	TN 57 U 7520	10,956
3	TN 57 Z 3464	17,843
4	TN 57 Y 2627	17,843
	மொத்தம்	**60,213**

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவீனத்தை பொதுநிதி 2022-23-ல் மேற்கொள்ளலாம்.

<u>ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>

61. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களின் ந.க.எண்.18698/2021/பி2, நாள்.05.10.2021 கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளவாறு, பழநி நகராட்சி வார்டுஎண். 25-ல் உள்ள இராஜாநகர் பகுதியில் பூங்காவை மேம்படுத்தும் பணியை நமக்கு நாமே திட்டம் 2021-22-ன் கீழ் பொது மக்கள் பங்களிப்புடன் பூங்காவை மேம்படுத்த, கீழ்க்காணும் பணிதேர்வு செய்து, ரூ.3.00/-இலட்சத்திற்கு பணிமேற்கொள்ள 12.05.2022-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.N.கருப்புச்சாமி, 18/32,டி.கே.என் புதூர். ஆயக்குடி. பழநி.	0.30%- மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.3000/- நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22-23/0000597நாள்.11.05.2022
2.	திரு.K.ஆறுமுகம், 80, அப்பர் தெரு, பழநி.	1.00.% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.3000/- நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22-23/0000599நாள்.11.05.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.N.கருப்புச்சாமி,என்பவர் -0.30% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:-

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.30% குறைவாக கொடுத்துள்ள திரு.N.கருப்புச்சாமி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

<u>ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>

62. பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகள் புதிய 1 முதல் 11வரையிலான வார்டுகளில் உள்ள சிறு மின்விசை பம்புகள் மக்களின் அன்றாடம் மற்றும் பிற உபயோகத்திற்கு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. சிறுமின் விசை பம்புகளில் பழுது ஏற்படும் போது பொது மக்களுக்கு அன்றாட தேவைக்கான தண்ணீர் கிடைக்காமல் சிரமம் ஏற்படுகிறது. அதனால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி வார்டுகளில் உள்ள சிறுமின்விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய உத்தேச மதிப்பீடு தொகைரூ.9,50,000/- இலட்சத்திற்கு பணிமேற்கொள்ள 27.04.2022-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி 8றப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.P.ராமசாமி, R.F.ரோடு . பழநி.	0.05%- மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.9500/- நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22-23/0000415 நாள்.27.04.2022
2.	திரு.K.ஆறுமுகம், 1, அப்பர் தெரு, பழநி.	0.56.% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.9500/- நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22-23/0000416 நாள்.27.04.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.P.ராமசாமி, என்பவர் –0.05% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:–

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.05% குறைவாக கொடுத்துள்ளதிரு.P.ராமசாமி,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

63. பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகள் புதிய 12 முதல் 22வரையிலான வார்டுகளில் உள்ள சிறு மின்விசை பம்புகள் மக்களின் அன்றாடம் மற்றும் பிற உபயோகத்திற்கு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. சிறுமின் விசை பம்புகளில் பழுது ஏற்படும் போது பொது மக்களுக்கு அன்றாட தேவைக்கான தண்ணீர் கிடைக்காமல் சிரமம் ஏற்படுகிறது. அதனால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி வார்டுகளில் உள்ள சிறுமின்விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய உத்தேச மதிப்பீடு தொகைரூ.9,50,000/–இலட்சத்திற்கு பணிமேற்கொள்ள 28.04.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.S.சரவணன், 27/14, சராப் லைன். பழநி.	0.10%– மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.9500/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0000402 நாள்.27.04.2022
2.	திரு.S.குருநாதன், 13/26, சராப் லைன். பழநி.	1.24.% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.9500/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0000429 நாள்.27.04.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.S.சரவணன், என்பவர் –0.10% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:–

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.10% குறைவாக கொடுத்துள்ள திரு.S.சரவணன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஒத்திவைக்கப்பட்ட பொருள்

64. பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகள் புதிய 23 முதல் 33வரையிலான வார்டுகளில் உள்ள சிறு மின்விசை பம்புகள் மக்களின் அன்றாடம் மற்றும் பிற உபயோகத்திற்கு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. சிறுமின் விசை பம்புகளில் பழுது ஏற்படும் போது பொது மக்களுக்கு அன்றாட தேவைக்கான தண்ணீர் கிடைக்காமல் சிரமம் ஏற்படுகிறது. அதனால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி வார்டுகளில் உள்ள சிறுமின்விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய உத்தேச மதிப்பீடு தொகைரூ.9,50,000/––இலட்சத்திற்கு பணிமேற்கொள்ள 28.04.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.P.துரைச்சாமி, 1, பழநி.	0.23%– மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.9500/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0000424 நாள்.27.04.2022

2.	திரு.R.ரவிக்குமார், 16/195, பாட்டாளி தெரு மெயின் ரோடு, தண்டபாணி நிலையம், அடிவாரம்,பழநி.	0.43% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.9500/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0000425 நாள்.27.04.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.P.துரைச்சாமி,என்பவர் – 0.23% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:–

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.23% குறைவாக கொடுத்துள்ளதிரு.P.துரைச்சாமி,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

65. பழநி நகராட்சி 1 முதல் 33 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம், செய்ய கோடைகால நீர் தேக்கம் மற்றும் பாலாறு அணையிலிருந்து இருந்து தினசரி குடிநீர் சுத்திகரிப்பு செய்து கிருமிகளை அகற்றி சுகாதாரமான, சுத்தமான குடிநீர் விநியோகம் செய்திட குளோரின் வாயு சேர்க்கும்முறையில் குடிநீர் சுத்திகரிப்பு செய்ய வேண்டியது அவசியமாகிறது, தற்போது குறைவான சிலிண்டர்களே இருப்பு உள்ளதால். பொதுமக்களின் நலன் கருதி சுகாதாரமான,சுத்தமான முறையில் குடிநீர் வழங்கிட, கேஸ் குளோரின் கொள்முதல் செய்ய தொகை ரூ.9.90/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது, மேற்படி பணியினை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்..
2. மேற்காணும் பணிக்கு ஆகும் செலவினத்தொகையினை குடிநீர் நிதி 2022–23–ல் மேற்கொள்ளலாம்.

66. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA/1 நாள்.20.09.2021 மற்றும் DAY NULM 2021–22–ம் அனுமதி குழுவின் மூன்றாவது கூட்டமர்வு நாள்.09.03.2022–ல் நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கான தொகுப்பில் பழநி நகராட்சி பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு நவீன விற்பனை வண்டிகள் கொள்முதல் செய்வதற்கு ரூ.204.94/– லட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநில அளவில், ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் மற்றும் தமிழ், ஆங்கில நாளிதழில்(தமிழ்நாடு பைனான்சியல் எக்ஸ்பிரஸ், முரசொலி) குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினத் தொகை ரூ.50000/– ஆயிரத்தினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்..
2. இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புதுறை சென்னை அவர்களின் கடிதம் நாள்.30.04.2022 அனுமதிக்கப்பட்டுள்ளவாறு MCS கம்யூனிகேசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு விளம்பரத் தொகையினை வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு ஆகும் செலவினத்தொகையினை பொதுநிதி 2022–23–ல் மேற்கொள்ளலாம்.

67. இந்நகராட்சியில் பல்வேறு பணிகளில் திரு,G.சுப்பிரமணி, ஒப்பந்ததாரர் வேலைகள் செய்து IHSDP, வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 1% தொகை (FSD) 5% தொகை (SD) மற்றும் EMD தொகையை வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி திரு.G.சுப்பிரமணி, ஒப்பந்ததாரரின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் அளவு புத்தகம் (ம) கோப்புகளின் அடிப்படையில் பொறியர் பிரிவு மற்றும் தணிக்கை பிரிவில் தொகை வழங்கலாம் என தெரிவித்துள்ளனர்.

மேலும் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக இருப்பதால் கீழ்க்கண்ட தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்	அளவுப் புத்ததகம்	திட்டத்தின் பெயர்	வருடம்	பதிவேடு	ப. எண்	வ.எண்	தொகை ரூ
1)	182/2014–15	IHSDP	2014–15	காலங்கடந்த நிலுவைப் பதிவேடு	42	95	39950/–
						மொத்தம்	39950/–

அலுவலக குறிப்பு:–

பொதுநிதி வைப்புத்தொகை கணக்கிலிருந்து (RF Deposite) செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

68. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA/1 நாள்.20.09.2021 மற்றும் DAY NULM 2021–22–ம் அனுமதி குழுவின் மூன்றாவது கூட்டமர்வு நாள்.09.03.2022–ல் நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கான தொகுப்பில் பழநி நகராட்சி பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு நவீன விற்பனை வண்டிகள் கொள்முதல் செய்வதற்கு ரூ.204.940/– லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள 18.05.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	மெசர்ஸ். தன்சித் டிரேடிங், ஏஜென்சிஸ், 21, கிழக்கு சிந்தாமணி, திருச்சிராபள்ளி–620002	0.57%– மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.204940/– தமிழ்நாடு மெர்கண்டையில் பேங்க் நாள்.16.05.2022
2.	மெசர்ஸ்.எஸ்.ஆர் எண்டர்பிரைசஸ், 169. N/1 கீழக்கடை வீதி முத்து நகர், துறையூர், திருச்சிராபள்ளி–621010	28.94%– மதிப்பீட்டிற்குஅதிகம் முன்வைப்புத் தொகை ரூ.204940/– கரூர் வைஸ்யா பேங்க் நாள்.16.05.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் மெசர்ஸ். தர்ஷினி டிரேடிங், ஏஜென்சிஸ்,என்பவர் – 0.57% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:–

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.57% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ். தன்சித் டிரேடிங், ஏஜென்சிஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

69. நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல்துறை மானிய கோரிக்கை அறிவிப்புகள் 2022–2023–ன் கீழ் பழநி நகராட்சி பகுதியில் 100 சதவீகித பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பழநி நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த ஏற்கனவே தயார் செய்யப்பட்ட திட்ட பிரேரணையில் கூடுதலாக விடுபட்ட மற்றும் விரிவாக்க பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தவும்,

மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய Project Development Grant Fund (PDGF)நிதி மூலம் கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்ய TNUIFSL நிறுவனத்திற்கு அனுமதியளிக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

Project Development Grant Fund (PDGF) நிதி மூலம் கலந்தாலோசகரை நியமனம் செய்து திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய TNUIFSL நிறுவனத்திற்கு அனுமதியளித்து நகர்மன்ற தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட முன்அனுமதியினை மன்றம் அனுமதிக்கலாம்.

70. பழநி நகராட்சி பகுதிகளில் மேற்க்கொள்ளப்படும் 2022-2023 ஆம் நிதி ஆண்டிற்கான மக்கள் நல திட்ட பணிகளை துவக்கி வைக்க திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை புரிந்த தமிழக முதல்வர் அவர்களை வரவேற்பதற்கு கீழ்க்கண்ட நாளிதழ்களில் **30.04.2022 – அன்று** விளம்பரம் **செய்யப்பட்டது**.

1. **தினகரன்** **ரூ**.19,740/-
2. **மாலைமலர்** **ரூ**.13,860/-
3. **தமிழ் முரசு** **ரூ**.8,400/-
4. **தினதந்தி** **ரூ**.22680/-

மேற்கண்ட **விளம்பரத்திற்கான** செலவினத்தொகைரூ.63,388/- ஐ (ரூபாய் **அறுபத்தி மூன்றாயிரத்து முன்னூற்று எண்பத்தி எட்டு மட்டும்**)பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலுகக்குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் செலவினத்தை பொது நிதி 2022-23-யில் மேற்கொள்ளலாம்.

71. பழநி நகராட்சி பொறியியர் பிரிவு பயன்பாட்டில் இருந்து வந்த TN 57 U **7520** ஈப்பு வாகனம் 05.07.2007-ல் வாங்கி பயன்படுத்தப்பட்டு 15 ஆண்டுகள் முடிவடைந்து 04.07.2022 அன்று தகுதிச் சான்று காலம் முடிவடைந்து விட்டதால் கீழ்கண்ட மராமத்து பணிகள்மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

1. வயரிங்
2. வாட்டர் சர்வீஸ்
3. வீல் கீரீஸ் பேக்கிங் அலாய்மெண்ட்
4. ஜாய்ண்ட் செக்கப்.
5. பிரேக் செக்கப்.
6. என்ட்டு ஸ்டார் செக்கப்.
7. கிளட்ச் செக்கப்
8. பேன் பெல்ட் புதியது
9. டயனெமோ செல்ப் மோட்டார் சர்வீஸ்
10. டயர்-1
11. ஹெட் லைட் பல்ப்-2 புதியது மாற்றி அலாய் மெண்ட்
12. இன்ஜின் பெட், பாடி பெட் புதியது.
13. டிங்கரின் பணி செய்து ஈப்பு முழுவதும் பெயிண்டிங் செய்தல்
14. அனைத்து டோர் லாக் செக்கப் செய்து கூலிங் பேப்பர் ஒட்டுதல்
15. ஆயில் சர்வீஸ் மற்றும் பில்டர்கள் புதியது
16. இடது, வலது பக்கம் டோர் பச்சை பீடிங் புதியது

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.70,000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்)மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணியினை மேற்கொள்ளலாம்.

72. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நேரடி கள ஆய்வின் போது காந்தி ரோடு மற்றும் கடைவீதி சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலினை சீர் செய்யும் பொருட்டு, பழநி நகராட்சி குளத்து பைபாஸ் சாலையிலிருந்து பட்டத்து விநாயகர் சாலை சந்திப்பு வரை உயர்மட்ட பாலத்துடன் கூடிய புதிய சாலை வழித்தடம் உருவாக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் புதிய சாலை வழித்தடம் அமைக்க உரிய வடிவியல் வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புடன் (Geometrical and Structural design) கூடிய விரிவான திட்டப்பிரேரணை தயார் செய்ய கலந்தாலோசகரை நியமனம் செய்ய தொகை ரூ.7.00/- இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. இப்பணி முக்கிய திட்டப்பணியாக இருப்பதால் நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்..
2. மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

73. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34, நாள்.07.04.2022-ல் மாண்புமிகு நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளதின்படி, பழநி நகராட்சி பழைய பேருந்து நிலையம் மேற்கு பகுதியில் உள்ள கடைகளை இடித்துவிட்டு புதிய கடைகள் மற்றும் கட்டமைப்புகள் அமைக்கும் பணிகளுக்கு தொகை ரூ. 400.00/-இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்குவதற்கு விரிவான திட்ட பிரேரணை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே விரிவான திட்டப் பிரேரனை தனியார் நிறுவனத்தின் மூலம் (Consultancy) தயார் செய்ய ஆகும் உத்தேச செலவின தொகையினை ரூ. 7.50/-இலட்சம்பொதுநிதியில் பணிமேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதியின்படி05.05.2022-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.அயோத்தி கன்சல்டன்சி 112,நாடார் வணிக வளாகம், காமராஜ்நகர், தாம்பரம்.	0.20%- மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.7500/- நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22-23/0000495 நாள்.04.05.2022
2.	திரு.சாமா கன்ஸ்ட்ரக்சன் அண்ட் டெவலப்மென்ட், 22/68,வெங்கடேசன் நகர், தாம்பரம்,	1.40%- மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.7500/- நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22-23/0000497 நாள்.04.05.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.அயோத்தி கன்சல்டன்சி, என்பவர் -0.20% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:–

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.20% குறைவாக கொடுத்துள்ளதிரு.அயோத்தி கன்சல்டன்சி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

74. பழநி நகராட்சி பொறியியர் பிரிவு பயன்பாட்டில் இருந்து வந்த TN 57 Y 2627 ஈப்பு வாகனம் 1998–ல் வாங்கி பயன்படுத்தப்பட்டு 15 ஆண்டுகள் முடிவடைந்து 04.07.2022 அன்று தகுதிச் சான்று காலம் முடிவடைந்து விட்டதால் கீழ்கண்ட மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

1. கம்பிளிட் வாட்டர் சர்வீஸ் செய்தல்
2. முன்புற வீல்களுக்கு கிரீஸ் பேக்கிங் செய்தல்
3. என்ஜின் பெட்ரப்பர் புதியது மாற்றுதல்
4. கம்பிளிட் வயரிங் வேலை செய்து பழுதடைந்த பல்புகள் புதியது மாற்றுதல்
5. புதிய பேட்டரி பொருத்துதல்
6. பின்புறம்தண்ணீர் பிடிக்கும் கேட் வால்வு மாற்றுதல்
7. ஸ்பிரிங் கட் டெம்மர் அடித்து புதிய புஸ்பின் மாற்றுதல்
8. டைனமோ மற்றும் செல்ப் மோட்டார் புதிய பிரஸ் மாற்றி பழுது நீக்கம் செய்தல்
9. தண்ணீர் ஓஸ் (50 அடி) புதியது மாற்றுதல்
10. இரண்டு டோர் லாக் சரி செய்து டிங்கரிங் வேலை செய்தல்
11. என்ஜின் பெல்ட் புதியது மாற்றுதல்
12. நான்கு பிரேக் லைனிங் செக்கப் செய்தல்
13. ஆயில் என்ஜின் பலகை (வாட்டர் ப்ரூப்) புதியது– மாற்றுதல்
14. இரண்டு கிளட்ச் கிட் புதியது மாற்றுதல்
15. கம்பிளிட் பெயிண்டிங் செய்து தேவையான இடத்தில் எழுத்துக்கள் எழுதி ஸ்டிக்கர் ஒட்டுதல்.
16. வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்துதல்.
17. தகுதி சான்றிதழ் பெற்று தருதல்.

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,05,000/– (ஒருலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்)மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதி 2022–23 –லிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணியினை மேற்கொள்ளலாம்.

75. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34, நாள்.07.04.2022–ல் மாண்புமிகு நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளதின்படி, பழநி நகராட்சி தினசரி காந்தி மார்கெட் பகுதியில் உள்ள பழைய கட்டமைப்புகள் மற்றும் கடைகளை அகற்றி புதிய மார்கெட் கட்டும் பணிக்கு தொகை ரூ.1500.00/– இலட்சம்மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு விரிவான திட்ட பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டுள்ளது. விரிவான திட்டப் பிரேரனை தனியார் நிறுவனத்தின் மூலம் (Consultancy) தயார் செய்ய ஆகும் உத்தேச செலவின தொகையினை ரூ.20.00/– –இலட்சம் பொதுநிதியில் பணிமேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின்

முன்அனுமதியின்படி05.05.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.அயோத்தி கன்சல்டன்சி 112,நாடார் வணிக வளாகம், காமராஜ்நகர், தாம்பரம்.	0.20%– மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.20000/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0000498 நாள்.04.05.2022
2.	திரு.சாமா கன்ஸ்ட்ரக்சன் அண்ட் டெவலப்மெண்ட், 22/68,வெங்கடேசன் நகர், தாம்பரம்,	1.70%– மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை ரூ.20000/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0000499 நாள்.04.05.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.அயோத்தி கன்சல்டன்சி என்பவர் –0.20% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு:–

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.20% குறைவாக கொடுத்துள்ளதிரு.அயோத்தி கன்சல்டன்சி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

76. பழநி நகராட்சி, AMRUT–2.0 திட்டத்தின் கீழ் கோடைகால நீர் தேக்கத்திலிருந்து அடிவாரம் மேல்நிலை தொட்டி வரைக்கும் புதிய DI குழாய்கள் அமைக்கும் பணிக்கு மற்றும் வரதமாநதி நீர்தேக்கத்திலிருந்து கோடைகால நீர்தேக்கத்திற்கு புதிய DI பைப்புகள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் முதன்மை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு விரிவான திட்ட பிரேரணை சமர்ப்பிக்க உத்திரவிடப்பட்டுள்ளது. விரிவான திட்டப் பிரேரனை தனியார் நிறுவனத்தின் மூலம் (Consultancy) தயார் செய்ய ஆகும் உத்தேச செலவின தொகையினை ரூ.13.00/–இலட்சம் பொதுநிதியில் பணிமேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதியின்படி05.05.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	திரு.அயோத்தி கன்சல்டன்சி 112,நாடார் வணிக வளாகம், காமராஜ்நகர், தாம்பரம்.	0.50%– மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.13000/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0000500 நாள்.04.05.2022
2.	திரு.சாமா கன்ஸ்ட்ரக்சன் அண்ட் டெவலப்மெண்ட், 22/68,வெங்கடேசன் நகர், தாம்பரம்,	0.80%– மதிப்பீட்டிற்குஅதிகம் முன்வைப்புத் தொகை ரூ.13000/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0000501 நாள்.04.05.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.அயோத்தி கன்சல்டன்சி என்பவர் –0.50% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.50% குறைவாக கொடுத்துள்ளதிரு.அயோத்தி கன்சல்டன்சி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

77. பழநி நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு தினசரி வழங்கப்டும் குடிநீரீனை சுத்திகரிப்பு செய்யும் முறையினை பயன்படுத்த ஃபெரிக் ஆலம் கட்டிகளை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி ஃபெரிக் ஆலம் கட்டிகள் சுமார் 8MTகொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகையினை ரூ.1.75/– இலட்சத்தினை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்..
2. மேற்காணும் பணிக்கு ஆகும் செலவினத்தொகையினை குடிநீர்நிதி 2022–23–ல் மேற்கொள்ளலாம்.

78. பழநி நகராட்சி பகுதிகளில் மேற்க்கொள்ளப்படும் **15 th CFC Tied Grand** 2021–2022 ஆம் நிதி ஆண்டிற்கான வளர்ச்சி மற்றும் திட்டப் பணிகள் மாவட்டம், மாநிலம் அளவில் **"Sreshta Communications' என்ற** நிறுவன செய்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.**8557/–** ஐ(ரூபாய் **எட்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தி ஏழு** மட்டும்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலுகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் செலவினத்தை பொது நிதி 2022–23–யில் மேற்கொள்ளலாம்.

79. பழநி நகராட்சி 1 முதல் 33 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம், செய்ய கோடைகால நீர் தேக்கம் மற்றும் பாலாறு அணையிலிருந்து இருந்து தினசரி குடிநீர் சுத்திகரிப்பு செய்து கிருமிகளை அகற்றி சுகாதாரமான, சுத்தமான குடிநீர் விநியோகம் செய்திட குளோரின் வாயு சேர்க்கும்முறையில் குடிநீர் சுத்திகரிப்பு செய்ய வேண்டியது அவசியமாகிறது, தற்போது குறைவான சிலிண்டர்களே இருப்பு உள்ளதால். பொதுமக்களின் நலன் கருதி சுகாதாரமான,சுத்தமான முறையில் குடிநீர் வழங்கிட, கேஸ் குளோரின் கொள்முதல் செய்ய தொகை ரூ.9.90/– இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள 24.06.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	M/s.கமலாஸ் அண்ட் கோ, 303/2,போடிபாளையம் ரோடு, மலுமிச்சம்பட்டி போஸ்ட்,	0.30%– மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.9900/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0001454 நாள்.23.06.2022
2.	M/s.ரியோ அக்வா டெக், 63,ஸ்பென்சர் காம்பவுண்ட், குறிஞ்சி லாட்ஜ் அருகில், திண்டுக்கல்.	1.20%– மதிப்பீட்டிற்குஅதிகம் முன்வைப்புத் தொகை ரூ.9900/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0001456 நாள்.23.06.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் M/s.கமலாஸ் அண்ட் கோ, என்பவர் –0.30% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.30% குறைவாக கொடுத்துள்ள M/s.கமலாஸ் அண்ட் கோ, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

80. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நேரடி கள ஆய்வின் போது காந்தி ரோடு மற்றும் கடைவீதி சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலினை சீர் செய்யும் பொருட்டு, பழநி நகராட்சி குளத்து பைபாஸ் சாலையிலிருந்து பட்டத்து விநாயகர் சாலை சந்திப்பு வரை உயர்மட்ட பாலத்துடன் கூடிய புதிய சாலை வழித்தடம் உருவாக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் புதிய சாலை வழித்தடம் அமைக்க உரிய வடிவியல் வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புடன் (Geometrical and structural design) கூடிய விரிவான திட்டப்பிரேரணை தயார் செய்ய கலந்தாலோசகரை நியமனம் செய்ய தொகை ரூ.7.00/– இலட்சத்திற்கு பொதுநிதியில் பணிமேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதியின்படி 17.06.2022–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

வ .எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விபரம்
1.	மெசர்ஸ். R & B கன்சல்டன்சி 68/38, கிழக்கு ஜோன்ஸ் ரோடு, சைதாபேட்டை, சென்னை–600015	0.40%– மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை ரூ.13000/– நகராட்சி கருவூலக ரசீது எண்,080/1/1/22–23/0001261நாள்.15.06.2022
2.	மெசர்ஸ்.அயோத்தி கன்சல்டன்சி 112,நாடார் வணிக வளாகம், காமராஜ்நகர், தாம்பரம்.,	2.00%– மதிப்பீட்டிற்குஅதிகம் முன்வைப்புத் தொகை ரூ.13000/– நகராட்சி கருவூலக ரசீது எண். 080/1/1/22–23/0001263நாள்.15.06.2022

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் மெசர்ஸ். R&B கன்சல்டன்சி, என்பவர் –0.40% சதவீதம் மதிப்பீட்டை குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் 0.40% குறைவாக கொடுத்துள்ளமெசர்ஸ். R & B கன்சல்டன்சி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

81. அரசாணை (நிலை) எண்.88 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறைநாள்.17.06.2022–ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–23–ல் அறிவு சார்மையம் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.8879/2022/P1, நாள்.21.06.2022–ல் நிர்வாக அனுமதி வரப் பெற்றுள்ளது. எனவே பழநி நகராட்சிக்குட்பட்ட ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் அறிவு சார்மையம் அமைக்கும் பணிக்கு ரூ.186.50/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நகராட்சிநிர்வாகஇயக்குநர்சென்னை, அவர்களிடம் மேற்காணும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

அலுவலக குறிப்பு:–

இப்பணி முக்கிய திட்டப்பணிகளாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம். நகர்மன்ற தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட முன் அனுமதியினை மன்றம் அனுமதிக்கலாம்.

82. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.6501/2021/ஊ.வ.11, நாள்:06.06.2022ன்படி இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு 2021 ஆம் ஆண்டிற்கான நகராட்சி ஆண்டு சந்தாவாக செலுத்த வேண்டிய ரூ.2500/– மட்டும் (ரூபாய் இரண்டு ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி 2021 ஆம் ஆண்டிற்குரிய சந்தா தொகை ரூ.2500/– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்: 1249/2018/சி2

நகராட்சி அலுவலகம்,பழநி
நாள். 07.07.2022

நகர்மன்ற தலைவர்
பழநி நகராட்சி